1970 ஆகஸ்ட் 28]

which would cost about Rs. 4 lakhs ? Because the Central Government and the State Government have not seen eye to eye in regard to this matter, the whole project has been held up?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The project has not been held up. Further particulars have been called for and it has been furnished. It may be mentioned that in January 1969, the General Manager, Southern Railway was requested to make provision in the level crossings fund for 1969–70 *inter alia* for realigning the road and construction of under-bridge at Mile 12/7 of Ooty–Mettupalayam Road. He has now stated that this is not in replacement of level crossing into road over/under bridge/that the work is only realigning the road and reconstruction of existing under-bridge and that this being done as a deposit work.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, இந்தப் பாலம் உள்ள பகுதியானது மிகவும் இடைஞ்சலாக உள்ள பகுதியாக இருப்பதனால், அங்கே அநேக விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆதலால், இந்த வேலையை மிக துரிதமாக செய்து முடிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : துரிதமாக நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அந்த இடத்தில் சற்று தெருக்கடிதான், அதன்காரணமாக இதைத் துரிதப்படுத்த வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தை விரிவுபடுத்துவதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து எவ்வளவு நிதி நமக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்? அப்படி ஒதுக்கவில்லையென்றால், எவ்வளவு ஒதுக்குவதற்கு கோரியிருக்கிறோம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விதி முறைகளின் படி இது நம்முடைய மாநில அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் ஏற்றுக்கொள்ள வேண்டிய செலவாகும். மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் கொடுக்க வேண்டும். அது எவ்வளவு என்பதைப் பற்றி என்னிடம் இப்பொழுது விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

* 103 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூரிலிருந்து அவனாசி செல்லும் பாதையில் நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலம் பழுது பட்டிருப்பதால் அதைப் புதுப்பிக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருப்பூர்–மேட்டுப்பாளையம் சாலையில் (பெரிய மாவட்டச்சாலை) 4/6–வது கல் தொலைவில் நல்லாற்றின் குறுக்கே உள்ள பாலத்தின் பக்கங்கள் கைப்பிடிச்சுவர்கள் ஆகியவற்றில் சில சிறிய வெடிப்புகளைத் தவிர

பாலத்தின் தற்போதைய நிலை மன நிறைவளிக்கும் வகையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேணுதல் மானியத்திலிருந்து இச்சிறு செப்பனிடு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

திரு. சு. துரைசாமி : திருப்பூரிலிருந்து அவனுசி செல்லும் பாதையில் இருக்கும் பாலம் இருக்கிற இடத்தில் 22 அடி அகலத்திற்கு தார் ரோடு போடப்பட்டிருக்கிறது. பாலம் 16 அடி அகலம் தான் இருக்கிறது. அதனால் இந்தப் பாலத்தில் போக்குவரத்து விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்றன. ஆகவே, அரசாங்கம் இதை நடப்பு ஆண்டில் புதுப்பிப்பதற்கு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்பொழுது இருக்கிற நிலையிலே இந்தப் பாலத்தை புதுப்பிக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதப்படுகிறது. ஆனால், சில அத்தியாவசியமான வேலைகளை, சில செப்பனிடுகளை பேணுதல் மானியத்திலிருந்து செய்ய வேண்டியிருக்கிறது. அவைகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்தப் பாலத்தை புதுப்பிக்கவேண்டுமானால், சுமார் ரூபாய் இரண்டு லட்சம் செலவாகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இந்தச் செலவினம் தற்பொழுது தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

துரித ரயில் வண்டிகள்

* 104 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரத்திலிருந்து திருவாரூர், திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி, காரைக்குடி வழியாக எக்ஸ்பிரஸ் ரயில் வண்டிகள் விடக்கோரி மாநில அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இல்லை, ஐயா.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தற்போது மாயூரத்திலிருந்து திருவாரூர் வழியாக காரைக்குடிக்குச் செல்லும் ரெயில் பாதையில் சாதாரணமாகப் போக அதிக நேரமாகிறது. துரித ரெயில் விட்டால், இரண்டு மணி நேரம் குறைவாக இருக்கும். ஆகவே, இனிமேலாவது அப்படி துரித ரெயில் விட நம் அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருத்துறைப் பூண்டி அறந்தாங்கி வழியாக காரைக்குடிக்கு கடுவிசை வண்டி விட செயற்குறிப்பு இல்லை என்றாலும், அந்தப் பகுதியில் ரெயில் போக்கு வரத்தை துரிதப்படுத்த, 1—4—1970 முதல், காரைக்குடிக்கு கூடுதலாகப் பயணிகள் வண்டிகள் இரண்டு திருத்துறைப்பூண்டியிலிருந்து விடுவதாக ஜெனரல் மானேஜர் தெரிவித்திருக்கிறார்கள்.